செ.வெ.எண்.620 நாள்.06.12.2017

காஞ்சிபுரம் மாவட்டம்

அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் டயாலிசிஸ் செய்வதற்கான கருவியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் இயக்கி வைத்தார்.

*****************

காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு டயாலிஸிஸ் செய்வதற்கு தலா ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.14 இலட்சம் மதிப்பிலான இரண்டு கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவரின் விருப்ப உரிமை நிதியிலிருந்து வழங்கினார்.

இக்கருவிகளை இயக்கி வைத்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,

காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஏற்கனவே 5 டாயலிஸிஸ் கருவிகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 40க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். கிட்னி பாதிக்கப்பட்டவர்களுக்கு யூரியாவின் அளவு அதிகமாக காணப்படும். இந்நோயாளிகளுக்கு உடலில் நீரின் அளவு அதிகமாகி மூச்சு விட சிரமப்படுவர். இக்கருவியின் மூலம் சிகிச்சை பெறுபவர்களுக்கு யூரிவின் அளவு குறைக்கப்பட்டு மூச்சு விடுவதில் ஏற்படும் சிரமம் குறைக்கப்படுகிறது. இக்கருவியின் தேவையை கருத்தில் கொண்டு இங்கு ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் மேலும் இரண்டு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் அலுவலர்கள் இதனை சரியான முறையில் உபயோகப்படுத்தி இச்சிகிச்சைக்கு வருபவர்களின் சிரமத்தை போக்கவும், நோய்க்கு உரிய தீர்வு காணவும் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருசி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் திரு. பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் காஞ்சி பன்னீர்செல்வம், முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் தும்பாவனம் திரு.ஜீவானந்தம், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.E.சகிகலா, மரு.கல்பனா ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்